DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 2/2019

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | :Pandian | Father/Husband Name: Vannan | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 30.04.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் தற்போது மேலூர் வெங்கடேஷ் நகரில் வசிக்கிறேன். இன்ஸ்யூரன்ஸ் கம்பெணியில் வேலை பார்த்து ஓய்வுபெற்றுவிட்டேன். இந்த வழக்கில் இறந்துபோன அம்பிகாபதி என் பையன். ஆஜர் எதிரி சரவணனை பார்த்திருக்கிறேன். கடந்த 18.10.17ம் வருடம் தீபாவளியன்று மதியம் 02.30 மணியளவில் கிடாரிப்பட்டியின் அருகில் முருகன் ஹோட்டல்காரரின் வீட்டின் முன்பாக என் மகன் அம்பிகாபதி ஓட்ட நான் பின்னால் அமர்ந்து எங்களது இருசக்கர வாகனமான டி.என். 59 பி.எஸ் 0769 என்ற இருசக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்குநோக்கி இடது ஓரமாக வந்துகொண்டிருந்தபோது, எதிரி டி.என்.59 எ டபுள்யு. 1218 என்ற டி.வி.எஸ் ஸ்போர்ட் என்ற இருசக்கர வாகனத்தில் எங்களுக்கு எதிர்திசையில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து எங்கள் வண்டியின்மீது மோதியதில் நாங்கள் கீழே விழுந்துவிட்டோம். எனக்கு வலது முழங்காலுக்குகீழ் எலும்பு முறிவு ஏற்பட்டும், இதுகண்புருவத்தில் இரத்தக்காயம் ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. வலதுபக்க கண்ணத்தில் வீக்கக்காயம் ஏற்பட்டிருந்தது. என் மகன் அம்பிகாபதிக்கு வலதுகாலின் கீழ்பகுதியில் அடிபட்டும், தலையில் அடிபட்டு இரத்தக்காயத்துடன் மயக்க நிலையிலிருந்தார். எதிரியும் கீழே விழுந்து மயக்கநிலையில் இருந்தார். அருகிலிருந்தவர்கள் 108 ஆம்புலன்சிற்கு போன்செய்து அதன்மூலம் எங்களை மேலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள். என் மகனை பரிசோதித்த மருத்துவர் வரும்வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார். பிறகு என்னை மதுரை

அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு பரிந்துரை செய்தார்கள். ஆனால் எனது வேண்டுகோளின்படி மதுரை தாஜ் தனியார் மருத்துவமனையில் நான் மேல் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அங்கு 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மறுநாள் காலையில் மேலவளவு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் தாஜ் மருத்துவமனை வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான், அந்த புகார் வாக்குமூலத்தை நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதி என்னிடம் படித்துக்காட்டிய பிறகு நான் கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். அதில் காஞ்சிவனம் என்பவர் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 2/2019

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | :Senthilkumar | Father/Husband Name: Vellayan | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 30.04.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கிடாரிப்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். அவரை விபத்து நடந்த அன்றுதான் நான் பார்த்திருக்கிறேன். ஆஜர் எதிரி சரவணனையும் சம்பவத்தன்று கீழே கிடந்தபோதுதான் நான் பார்த்தேன். 2017ம் வருடம் தீபாவளியன்று பகல் 2.30 லிருந்து 3 மணிக்குள் கிடாரிப்பட்டிக்கும் மாப்பாறை பஸ் ஸ்டாப்பிற்கும் இடையில் ஹோட்டல் முருகனின் வீட்டின் அருகில் மாப்பாறை பஸ் ஸ்டாப்பில் சம்பவ இடத்திலிருந்த 100 மீட்டர் தொலைவிலிருந்தபோது டமார் என்று சத்தம் கேட்டது சம்பவ இடம் சென்று பார்த்தபோது இரண்டு இருசக்கர வாகனங்கள் உடைந்த நிலையில் கிடந்தது. அ.சா.1ம் அவரது மகன் மற்றும் எதிரி சரவணன் ஆகியோர்கள் இரத்தக்காயங்களுடன் இருந்தார்கள். அவர்களுக்கு தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிய முயற்சி செய்தோம். 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து காயம்பட்ட 3 பேரையும் ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மறுநாள் அ.சா.1ன் மகன் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 2/2019

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | :Pitchai | Father/Husband Name: Vannan | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 30.04.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் மேலவளவில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1 என் தம்பி. ஆஜர் எதிரியை நான் பார்த்ததில்லை. 2017ம் வருடம் தீபாவளியன்று பகல் 2.30 மணிக்கு கிடாரிப்பட்டிக்கும் மாப்பாறை பஸ் ஸ்டாப்பிற்கும் இடையில் ஹோட்டல் முருகனின் வீட்டின் அருகில் விபத்து நடந்ததாக அ.சா.1 போன்மூலம் தகவல் சொல்லி சம்பவ இடம் சென்று பார்த்தபோது காயம்பட்டவர்களை 108 ஆம்புலன்ஸ்மூலம் மேலூர் மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டதாக கேள்விப்பட்டு மேலூர் அரசு மருத்துவமனை வந்து பார்த்தேன். அங்கே என் தம்பி மகன் அம்பிகாபதி இறந்துவிட்டார். என் தம்பிக்கு மண்டை உடைந்து கால் உடைந்து இரத்தக்காயத்துடன் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 2/2019

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | :Kanjivanam | Father/Husband Name: Nallayan | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 30.04.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் மேலவளவில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரியை நான் பார்த்ததில்லை. 2017ம் வருடம் தீபாவளியன்று பகல் 2.30 மணிக்கு கிடாரிப்பட்டிக்கும் மாப்பாறை பஸ் ஸ்டாப்பிற்கும் இடையில் ஹோட்டல் முருகனின் வீட்டின் அருகில் விபத்து நடந்ததாக அ.சா.1 போன்மூலம் தகவல் சொல்லி சம்பவ இடம் சென்று பார்த்தபோது அ.சா.1 காயங்களுடன் இருந்தார். அவர் மகன் அம்பிகாபதி சுயநினைவில்லாமல் இருந்தார். பிறகு அவர்களுடன் ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு நானும் உடன் சென்றேன். மருத்துவமனையில் அம்பிகாபதியை பார்த்த மருத்துவர் இறந்துவிட்டதாக சொன்னார். என் அண்ணனுக்கு மண்டை உடைந்து கால் உடைந்து இரத்தக்காயத்துடன் இருந்தார். அவரை மதுரை தனியார் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அழைத்துச்சென்றோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 2/2019

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | :Lajapathi | Father/Husband Name: Duraipandi | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 03.09.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் மேலூர் தெற்குத்தெருவில் வசிக்கிறேன். ஆசிரியையாக பணிபுரிகிறேன். அ.சா.1 என் அப்பா. இந்த வழக்கில் இறந்துபோன அம்பிகாபதி என் அண்ணன். விபத்தை ஏற்படுத்திய சரவணன் என்பவரின் பெயர் மட்டும் தெரியும், ஆளை பார்த்ததில்லை. கடந்த 18.10.17ம் தேதி பகல் 02.30 மணியளவில் கிடாரிப்பட்டி அருகில் ஹோண்டாசைன் என்ற இருசக்கர வாகனத்தில் எனது அண்ணன் ஓட்ட என் அப்பா பின்புறம் அமர்ந்து சென்றபோது அவர்களுக்கு எதிர்திசையில் வந்த டி.வி.எஸ்.ஸ்போர்ட் என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த எதிரி எங்கள் அண்ணன் ஓட்டிய வாகனத்தின்மீது மோதியதில் விபத்து ஏற்பட்டதாக என் உறவினர் போன் மூலம் தகவல் சொல்லி நான் மேலூர் அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். அங்கு என் அண்ணனுக்கு பின்பக்க தலையில் இரத்தக்காயம்பட்டும், ஒருகால் நொறுங்கியும் இறந்துவிட்டார். என் அப்பாவிற்கு வலது முழங்காலுக்கு கீழ் எலும்பு முறிவும், இடதுகண்ணத்தில் பலத்த காயமும் ஏற்பட்டிருந்தது. என் அப்பா 2 வாரகாலம் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தார். மேற்படி விபத்திற்கு எதிரிதான் காரணம் என்று கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 2/2019

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | :Periyavar | Father/Husband Name: Kattaiyan | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 03.09.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கிடாரிப்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள கையெழுத்து என்னுடையதில்லை, நான் கைரேகைதான் வைப்பேன். போலீசார் என்னிடம் கைரேகை எதுவும் வாங்கவில்லை. முன்பு ஒருநாள் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தனர்.

(சாட்சி 161 குவிமுச பிரிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதால் அனுமதிக்கப்படுகிறது. )

குறுக்கு விசாரணை: அரசுதரப்பில்

கடந்த 19.10.17ம் தேதி 09.30 மணிக்கு நானும் பாண்டித்துரை என்பவரும் சம்பவ இடத்திலிருந்தபோது மேலவளவு காவல் நிலைய ஆய்வாளர் வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்து சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் நான் கையெழுத்து செய்தேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு சாதகமாக கைரேகை வைப்பேன் என்று பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 2/2019

Deposition of witness for: PW - 7

Name :Pandidurai Father/Husband Name: Pandi

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 03.09.2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கிடாரிப்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் சம்பவ இடத்தில் வைத்து போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைடம் தயார் செய்து சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் நானும் பெரியவர் என்பவரும் கையெழுத்து செய்தோம், முதலில் பெரியவர் கையெழுத்து செய்தார் பின்பு நான் கையெழுத்து செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.